## 61

## முந்திரிகை – முந்திரி

முந்திரிகை என்பதை வடசொல் என்று நம்பும் தமிழர்களும் இருக்கிறார்கள் இந்த இரங்கத்தக்க தமிழகத்தில்.

இது கீழ்வாய் இலக்கத்துள் ஒன்று. அதாவது ஒன்றை முந்நூற்றிருபது பங்காக்கியதில் அவற்றிலொரு பங்கின் பெயர்.

முந்திரிகை என்னும் தொடர் மொழியில் முந்து இரிகை என்ற இரு சொற்கள் உள்ளன. முந்து என்பது காலமுறையில் வைத்து எண்ணினால், கீழ் என்பது பொருளாகும். இரிதல் -சாய்தல், ஒன்று என்பது தன் கீழ்நோக்கிச் சாய்ந்த பகுதி அதாவது கீழ் வாயிலக்கத் தொன்று என்று பொருள் கொள்க.

எனவே முந்திரிகை தூய தமிழ்க் காரணப் பெயர் என்க.

இதுவே முந்திரி என்றும் ஈறு கெட்டு வழங்குவதுண்டு.

கீழ் நோக்கிச் சாய்ந்துள்ள முந்திரிப் பழத்தையும் அவ்வழியே அதன் முதலாகிய முந்திரியையும் குறிக்கும் என்பதும் ஈண்டு அறியத்தக்கது.

### கதை

இது கதா என்ற வடசொல்லின் சிதைவு என்று வடவர் கூறுவதும், அதைத் தமிழர் நம்புவதும் ஆகிய இரண்டுமே மொழியாராய்ச்சி யில்லாமையினின்று தோன்றியவை.

கதுவல் – பற்றுவது: தொழிற் பெயர். கது என்பது முதனிலைத் தொழிற் பெயர். இதுவே முதனிலைத் திரிந்த தொழிற் பெயராகக் காது என வரும். காது – ஒலியைப் பற்றுவது. இக் கது – ஐ தொழிற் பெயர் இறுதிநிலை பெறின் கதையாம். கதையை அனைத்துமொரு

முதனிலையாகக் கொண்டு கதைத்தல் என்றும் வரும். கதை - நடந்த, கேட்கப்பட்ட கருத்தைப் பற்றுவது என்று பொருள் கொள்க.

எனவே, கதை தூய தமிழ்க் காரணப் பெயர். வடசொல் அன்று. தமிழ்ச் சொல்லையே வடவர் எடுத்தாண்டனர்.

**- குயில் , 29.9.1959**

# 62

## மது

மதுகை எனினும் மடுகை எனினும் பொருள் ஒன்றே. மெய்வழி ஊற்றை அகப்படுத்தலும், வாய் வழிச் சுவையை அகப்படுத்தலும், கண்வழி ஒளியை அகப்படுத்தலும், மூக்கு வழி நாற்றத்தை அகப்படுத்தலும் காது வழி ஒலியை அகப்படுத்தலும் ஆகிய ஓர் "ஆற்றல்" மதுகை மடுகை என்பவற்றின் பொருள்.

மது என்பது மதுகை என்பதன் முதனிலைத் தொழிற் பெயர். அகப்பத்தால் உண்டாகும் இனிமைக்குத் தொழிலாகு பெயர். மடுகை என்பதும் இவ்வாறே. மடுகை மடுத்தல் எனவும் வரும்.

மது, தேன், கள், இனிமை, தித்திப்பு முதலியவற்றைக் குறிக்கும்.

மது என்பதை வடசொல் என்று வடவர் கூறிப் பொய்ப்பார். மொழி ஆராய்ச்சி இல்லாத நம் தமிழர்களிற் சிலரும் 'ஆமாம்: ஆமாம் இது வடமொழி தான்' என்று கூத்தாடுவர்.

மது தூய தமிழ்க் காரணப் பெயர் என்று கடைப்பிடிக்க.

மடுகை மதுகை என்பவற்றில் எது முன்னையது எனின், மடுகையே முன்னதாதல் வேண்டும். எனவே மடுகையே மதுகை ஆயிற்று என அறிதல் வேண்டும்.

**- குயில், 6.10.1959**

# 63

## சாரம்

சார்தல், சார்கை, சாருதல், சாரம் அனைத்தும் ஒரே பொருள் உள்ள தொழிற் பெயர்கள். சார் + அம். அம்தொழிற் பெயர் இறுதிநிலை.

சாரம் ஒன்றைச் சார்ந்தது, சார்வது. ஒன்றை வடித்ததும் சாரம் எனப்படும். ஒன்றைச் சார்ந்து நிற்பதும் சாரம் எனப்படும். சுக்குநீர்ச் சாரம் என்பதில் சக்கை போகச் சார்ந்து மிகுந்தது எனப் பொருள்படுதல் காண்க. நூற்சாரம் என்பதில் நூலின் இன்றியமையாக் கருத்தை வடித்ததும், வேண்டாக் கருத்துக்களை விடுத்ததும் காண்க! மற்றும் கட்டுச் சுவர் எழும் வரைக்கும் அதைச் சார்ந்து நிற்கும் சாரக்கட்டை உணர்த்தலும் காண்க. மேற்காட்டிய பொருளில் சாரம் என்பது தூய தமிழ்க் காரணப் பெயரே என்க.

## சுரம்

சுரம் என்ற ஒலி வடமொழியிலும் இருக்கலாம். அதற்கும் தமிழ்ச் சுரத்திற்கும் தொடர்பே இல்லை.

சுரம் என்பது வடமொழி அன்று என்றும், அது தமிழ்ச் சொல்லே என்றும் துணிக.

சுர் என்பது விரைவையும் ஒலியையும் குறிக்க வருவதோர் குறிப்பிடைச் சொல் - இதனால் அது தீய சுவையின் தாக்குதலையும், தீய ஒளியின், தீய ஊற்றின், தீய ஓசை தீய நாற்றம் இவற்றின் தாக்குதலையும் குறிப்பதாயிற்று. சுர் என்பது அம் சாரியை பெற்றுச் சுரம் ஆனது. அருநெறி, கள், காடு, காய்ச்சல், பாலை நிலம், நெடுவழி இவற்றைக் குறிக்கத் தமிழில் சுரம் என்றால் பிழையாகாது. அது வடசொல்லன்று, தூய தமிழ்க் காரணப் பெயர். இதை சுவரம் என்றுகூறிக் காய்ச்சலைக் குறிப்பவர் பிழை செய்தவராவார்கள். காய்ச்சலைக் குறிக்கும் போதும் சுரம் தூய தமிழ்க் காரணப் பெயரே.

ஆனால் சுவரம் என்றதோர் வடமொழி உண்டு. அதற்கும் சுரம் என்பதற்கும் தொடர்பே இல்லை. சுவரம் என்ற வட சொல்லுக்கு இசை என்பது பொருள்.

**- குயில், 13.10.1959**

## 64

## பாலன், பாலியன்

இந்தச் சொல் காதில் விழுந்ததும் தமிழனுக்கு எத்தகைய நினைவு தோன்றவேண்டும்? பால் குடிக்கும் பருவமுள்ள ஒரு குழந்தை நினைவல்லவா வரவேண்டும்! ஏன்? அந்தச் சொல் பால் என்றதிலிருந்தல்லவா துவங்குகின்றது! அவன் பாலன் என்ற தொடரில் அவன் எழுவாய், பாலன் பயனிலை, எனவே, இங்கு பால் முதனிலை! அன் ஆண்பால் ஒருமைக் குறிப்பு வினைமுற்று. பாலை உடையவனாய் இருக்கிறான் என்பது பொருள். பாலன் வந்தான் என்றவிடத்தில் பாலன் குறிப்பு வினையாலணையும் பெயராகும். பாலை உடையவன் அல்லது பால் குடிப்பவன் என்று பொருள் படுவதால்.

இவ்வாறெல்லாம் இல்லாமல் பாலன் என்பது இளம் பருவமுடையவன். பிள்ளை என்ற பொருளில் வழங்கும் போது பால் என்று தூய - தெரிந்த - தமிழ்ப் பெயர் நமக்குக் காட்சியளிக்கிறது. அது கொண்டு பாலன் என்பது பால் குடிக்கும் இளையவன் என்ற பொருள் நமக்குத் தோன்ற வேண்டாமா? அதில் உள்ள தமிழ்த் தன்மை மட்டும்தானே நமக்குப் புலனாக வேண்டும்.

இவைகளை எல்லாம் விட்டு விட்டுப் பாலன் என்பது ஒரு வடசொல் என்ற இருள் நம்மை வந்து சூழ்ந்து கொள்வானேன்? பாலன் என்பது குழந்தை என்று பொருள்படும்போது அஃது ஓர் ஆகுபெயராகும். பால் என்பது பால் குடிக்கும் பருவத்துக்கு ஆவதால்.

இனி,

பால் என்பதே பாலம் பாலியம் என அம்முச்சாரியையும் அம்மோடு இகரச் சாரியையும் பெற்று, இளம் பருவத்தைக் குறிக்கும். ஓவம் ஓவியம் காண்க.

பாலன், பாலியன் என்பவை வடசொற்கள் என்று வடசொற்காரர் ஏய்ப்பர். ஏமாறாதிருக்கவே இவ்வாறு ஆராயப் பெற்றது. பாலன், பாலியன் தூய தமிழ்க் காரணப் பெயர் என்று தெளிதல் வேண்டும்.

## நீதி

இது வடசொல் அன்று. நீப்பு, நீத்தல், நீங்கல், நீதல், நீதி அனைத்தும் தொழிற் பெயர்கள். நீதி என்பதில் நீ முதல் நிலை! தி, தொழிற்பெயர் இறுதிநிலை! தி. தொழிற்பெயர் இறுதி நிலையாய் வருதலைச் செய்தி, உய்தி, ஆதி என்பவற்றில் காண்க.

நீதி என்பதன் நேரான பொருள், மனம், புலன்களின் மேல் செல்லுவதினின்று நீங்கி இருப்பது; அது பற்றின்மையைக் குறித்தது. அப்பற்றின்மை ஒருபால் கோடாமையாகிய ஓர் ஆற்றலுக்கு ஆனது; ஆகுபெயர்!

நீதிநூல் அறநூல் இயற்றுவாரும் தமிழரசர் காலத்தில் பற்றற்ற துறவிகளே. இவர்களை நீத்தார் என்ற பெயராற் குறித்தார் வள்ளுவரும்.

நீதி என்ற சொல்லே நமக்குப் பல உண்மைகளைக் காட்டி நிற்கின்றது. மேலும் பழந்தமிழர் பண்பாட்டையும் அது விளக்குகின்றது அன்றோ!

நீதி, வடசொல் என்று கதைப்பதும், அதை மதிப்பதும் அறிவு மதுகை அற்றார் செயல் என விடுக்க, நீதி தூய தமிழ்க் காரணப் பெயர்.

**- குயில், 20.10.1959**

## 65

## சேட்டு

இது தூய தமிழ்க் காரணப் பெயர். வடமொழியின் கிளைமொழி என்று எண்ண வேண்டாம். தமிழ்ச் சொற்கள் பண்டு பிறமொழியாளர் பலரால் எடுத்தாளப்பட்டன. அவற்றில் இதுவும் ஒன்று என உணர்தல் வேண்டும்.

நடுவு நிலைப் பொருட்டாகிய செம்மை என்ற பண்புப் பெயரினின்று தோன்றிய செட்டு என்பது முதல் நீண்டு சேட்டு ஆனது. செட்டி என்பதும் செம்மையிற் தோன்றியதே.

இனிச், செட்ட என்பதன் திரிபாகிய சட்ட என்ற சொல் பற்றிச் சிவஞானபோத உரையாசிரியர் **செம்மைப் பொருட்டாவதோர் அகர வீற்றிடைச் சொல்** என்று சொல்லியுள்ளதும் இங்கு நினைவு கொள்ளத் தக்கது.

சேட்டு, நடுவு நிலைமைக் கொள்கையின் அடிப்படையில் ஆவதோர் வாணிகம். வாணிகனை உணர்த்தும்போது ஆகுபெயர் என்க.

## திருமதி

சீமதி என்ற வடசொற்றொடரிலுள்ள மதிக்கும், திருமதி என்ற தொடரிலுள்ள மதிக்கும் தொடர்புண்டா?

மதி என்ற சொல் தமிழிலக்கியங்களில் தனக்கென ஒரு பொருளில்லாத இடைச் சொல்லாகவும் - அசைச் சொல்லாகவும், தனக்கென ஒரு பொருள் கொண்ட தனிச் சொல்லாகவும் வரக் காணுகின்றோம்.

கேண்மதி, இறக்குமதி என்பவற்றிற் காண்க. மதிப்பு என்பதன் முதனிலையாகிய மதி என்பதைக் காண்க.

மதி என்பது பற்றிப் பேராசிரியர் மறைமலையடிகளார் ‘இது தமிழ்ச் சொல்; அளப்பது, காலத்தை வரையறுப்பது என்பன அச்சொல்லின் பொருள்கள்’ என்று கூறியிருக்கின்றார்கள். அளப்பதும்

வரையறுப்பதும் மதிப்பு என்பதுதான். இது ஆகுபெயராய் மதிப்புடைய திங்களையும் குறிக்கும். மதித்தல் ஆகிய ஓர் அறிவையும் குறிக்கும்.

எனவே திருமதி என்பதற்குத் திருவால் மதிப்புடைய ஒரு பெண் எனப் பொருள் கொள்ளுதலிலும், திருவும் அழகும் உடைய ஒரு பெண் என்று பொருள் கொள்ளுதலிலும் இழுக்கென்னை?

அவ்வாறு பொருள் கொள்ளுங்கால் முன்னது மூன்றாவதன் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை என்றும், பின்னது உம்மைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை என்றும் ஆகும்.

எனவே திருமதி என்பது தூய தமிழ்ச் சொற்றொடர் என்று கடைப்பிடிக்க.

- **குயில், 3.11.1959**

## 66

## விகுதி

இது விகுரிது என்ற வடசொல்லின் சிதைவென்று வடசொல்காரர் சொல்லி ஏமாற்றுவர். தமிழரும் ஆராய்ச்சி இல்லாமையானும், கண்ணை மூடிக் கொண்டு பார்ப்பனரைப் பின்பற்றுவதோர் நோயுடைமையானும் ஏமாறுவர்.

விகுதல், விகல், விக்கல், விக்குள், விகுதி அனைத்தும் இறுதிநிலை வேறுபடினும் ஒரே பொருளைத் தரும்தொழிற் பெயர்கள்.

உள்நின்ற புனலின் அளவு இறுதிபடுதலே விக்குள் ஆம். அதே பொருளுடையனவே பிறவுமாம். விகுதி - விகு முதனிலைத் திரிந்த தொழிற் பெயர் இறுதிநிலை என உணர்க.

எனவே, விகுதி தூய தமிழ்க் காரணப் பெயர் என்க

### அச்சாரம்

ஓர் ஒப்பந்தம் பற்றி எழும் அச்சத்தைத் தீர்த்துக் கொள்வதற்கான முற்பணம் என்பது இதன் பொருள்.

இது முதலில் அச்சவாரம் என இருந்தது. பின்னர் அகரம் கெட்டு அச்சாரம் என்றாயிற்று.

அச்சம் - அஞ்சுதல், வாரம் - பங்கு பகுதி, அச்சப் பகுதி ஆகிய இது, பணத்திற்கானது ஆகு பெயர். எனவே அச்சாரம் தூய தமிழ்க் காரணப் பெயர் என்க.

### பெட்டி

இது பேட் என்ற வடசொல்லின் சிதைவென்று ஒரு பன்மொழிப் புலி, சொல்லித் திரிவதாக, மற்றொரு பன்மொழிப் புலி நம்மிடம் கூறக் கேட்டு நகைத்தோம், அந்தப் பன்மொழிப் புலி, இந்தப் பன்மொழிப் புலியிடம் ஏன் சொல்லும்? இந்தப் புலி ஏன் கேட்டுக் கொண்டிருக்கும்?

இல்லாததைச் சொன்னால் முகத்தில் உமிழ்வானே என்று நினைத்தால் அப்புலி இப் புலியிடம் சொல்லத் துணியுமா?

பெட்டு, பெட்டல் இரண்டுக்கும் ஒன்றே பொருள் பேணுதலும் விரும்புதலும்

பெட்டலின் அடியாகிய பெட்டு என்பது 'இ' பெயர் - இறுதிநிலைப் பெற்று பெட்டியை உணர்த்திற்று. எனவே பெட்டி - விருப்பத்தைப் பெற்றிருப்பது.

பெட்டி என்பது தூய தமிழ்க் காரணப் பெயரன்றோ.

இதனைப்

"**பிணையும் பேணும் பெட்பின் பொருள்**

என்ற தொல்காப்பிய நூற்பாவாலும்.

**பெட்ட வாயில்பெற் றிரவுவலி யுறுப்பினும்**
**காய்தலும் உலத்தலும் பிரித்தலும் பெட்டலும்**"

என்ற கற்பியல் அடியாலும், நம் தமிழ்ப் புலவர்கள் உணர்ந்து வைத்தும், வடநாட்டானிடம் ஓடிப் பெட்டி என்றதற்கு ஒத்த ஒலி வடமொழியில் ஏதாவது உண்டா; தமிழைத் தாழ்த்திக் கூறவேண்டும் என்று கேட்டு அங்கிருந்து ஓடிவந்து தமிழரை நோக்கிப் பெட்டி என்பது பேட் என்ற வடசொல்லின் சிதைவென்று மானமற்ற வகையில் சொல்லித் திரிவது ஏன்? காட்டிக் கொடுத்து வயிற்றை வளர்க்கத்தானே!

**- குயில், 17.11.1959**

## 67

### காந்தி

இது வடசொல்லே என்று வடவர் கூறினாலும் தமிழுக்கும் அதற்கும் தொடர்பில்லை என்று எவராலும் சொல்ல முடியாது. காந்துதல், காந்தல், காந்தி அனைத்தும் ஒளிபடுதல் என்ற பொருளுடைய தொழிற் பெயர்கள். எனவே காந்தி ஒளி செய்தல் என்ற பொருள்படும் தூய தமிழ்க் காரணப் பெயரேயாகும். இது ஒரு பொருளுக்கு ஆகும் போது ஆகுபெயராம்.

காந்தி என்ற ஒலி வடமொழியில் இருக்கலாம். அது இதுவல்ல.

### ஆயுள்

ஆயுசு என்பது வடசொல் என்றும், ஆயுள் அதன் திரிபு என்றும் கூறுவர் வடவர்.

ஆயுசு, ஆயுக, ஆயுள் என்பன அனைத்தும் தூய தமிழ்க் காரணப் பெயர்களேயாகும். ஆய்+உ+சு = முதனிலை சாரியை தொழிற் பெயர் இறுதிநிலை. ஆயுது என்பதும் அது; ஆயுள் என்பதும் அது! அதில் உள் இறுதிநிலை! இது தல் இறுதி நிலை ஏற்று ஆய்தல் என வருதலும் காண்க. ஆயுள் என்பதற்கு ஆராய்தல் என்பன பொருள்கள் என்க. மக்களுக்கு உண்டான ஆண்டு வாழ்நாளின் இடை யிடையே ஆராயப்படுவது அன்றோ? ஆயுள் செயப்பாட்டு வினை செய்வினையாய் வந்தது என உணர்க.

எனவே ஆயுள் (ஆயுசு) வடசொல் அன்று, தூய தமிழ்க் காரணப் பெயர்.

**- குயில், 24.11.1959**

# 68

## ஒருவந்தம்

இது வள்ளுவர் வெருவந்த செய்யாமை என்னும் அதிகாரத்தில்

"வெருவந்த செய்தொழுகும் வெங்கோலன் ஆயின்
ஒருவந்தம் ஒல்லை கெடும்."

என்ற குறட்பாவில் வந்துள்ளது. இக் குறட்பாவிற்கு உரை கூறவந்த பரிமேலழகர்.

ஒருவந்தம் - (அரசன்) ஒருதலையாக என்று கூறி அவரே, விரிவுரையில் ஒருவந்தம் ஏகாந்தம் என்பன ஒரு பொருட் கிளவி என்று குறித்தார்.

ஏகாந்தம் என்பதிலுள்ள ஒரு என்பதை ஏகம் என்றும் அந்தம் எனப் பிரித்துக் கொண்டதை வடசொல் என்றும் அவர் நம்மை எண்ணச் செய்கின்றார். ஒருவந்தம் என்பதை ஒரு + அந்தம் என்று பிரித்த இவர் ஒரு என்பதன் முன் உயிர் வந்தால், அந்த ஒரு ஓர் என்றாகி அந்தம் என்பதனோடு சேர்ந்து ஓராந்தம் என ஆகும் என்ற இலக்கணச் சட்டத்தையும் எண்ணவில்லை. தமிழ்ச் சொற்களையெல்லாம் வடசொல் என்று காட்டி வடமொழியினின்றே தமிழ் வந்தது என்ற பொய்க் கொள்கையை நிலை நாட்டுவதிலே தம் கண்களையும் கருத்தையும் செலுத்துகின்றார்.

இச்செயல் அல்ல புரிவதாகும். ஆதலின் மேல் அறமும் தோன்றாது போனதில் வியப்பொன்றுமில்லை.

ஒருவந்தம் என்பதை ஒரு+வந்தம் என்றே பிரிக்கவேண்டும் என்பதையும் வந்தம் என்பது தூய தமிழ்ச் சொல் என்பதையும் ஈண்டு விளக்கப்படும்.

வெருவந்த செய்தொழுகும்... என்று தொடங்கும் ஷை குறட் பாவின் ஒருவந்தம் என்பதை நோக்குமுன் மேல் வந்திருக்கும் வெருவந்த என்பதையும் நோக்க வேண்டும். வெரு+அச்சம், வந்த

பலவின்பால் வினையாலணையும் பெயர். அச்சம் அமைந்தவை (அஞ்சத் தக்க செயல்கள்) என்பது அதன் பொருள்.

ஷெ அதிகாரம் ஒன்பதாம் குறட்பாவிலும் வெருவந்து வெய்து கெடும் என வந்திருப்பதும் நோக்குக. இங்கு வெருவந்து - அஞ்சதல் அமைந்து, (எனவே அஞ்சி) என்பது பொருள். இதில், வந்து வினையெச்சம். எனவே இதன் தொழிற் பெயர் எது? வெருவந்தம் அன்றோ? ஒருவந்தம் என்பது போலவே நமக்கு வெருவந்தம் என்ற தொடரும் கிடைக்கின்றது. எரிவந்தம் என்பதும் ஒன்று.

எனவே ஒருவந்தம் வெருவந்தம், எரிவந்தம், என்பனவற்றை நோக்குங்கால் வந்தம் என்பதே அன்றி அந்த அந்தம் என்பதை நாம் வலிந்து இழுத்துப் போர்த்துத் தொல்லையுற வேண்டாம்.

இனி வந்தம் என்பதைப் பற்றி ஆராயப்படும்.

வா என்ற முதனிலை வந்தான் என்னும் போது வ எனத் திரியும் வருகின்றான் என்னும் போது வரு எனத் திரியும். அதுபோல வந்தம் என்னும் தொழிற்பெயரில் வா என்பது வந்து எனத் திரிந்தது என உணர்தல் வேண்டும். இதில் அம் தொழிற்பெயர் இறுதிநிலை ஆட்டம் என்பதிற்போல.

இனி வெருவந்தம் ஒருவந்தம். எரிவந்தம் என்பவற்றில் வெருவரல். ஒருவரல், எரிவரல் (எரிவுவரல்) என்பவை காண்க. எனவே வெருவரல் - அஞ்சத் தகுந்தது. ஒருவரல் - தனித்தோற்றம் புகழ், உறுதி; எரிவரல்- எரிச்சல் அடைதல் என்பன பொருளாகக் கொள்க.

எனவே ஒருவந்தம் என்பதைப் பரிமேலழகர் ஒரு அந்தம் எனப் பிரித்தது பிழை என்பதும், ஒருவந்தம் என்பதில் உள்ள வந்தம் தூய தமிழ்க் காரணப் பெயர் என்பதும் பெற்றாம்.

## புத்தகம்

புஸ்தகம் வடமொழி என்றும் அதன் சிதைவே புத்தகம் என்றும், ஆதலால் புத்தகம் வடசொல்லே என்றும் கூறி மகிழ்வர் வடசொல் காரர். அவரடி நத்தும் தமிழர்களும் அப்படி!

புத்தகம், புதுமை அகம் எனும் இரு சொற்கள் சேர்ந்த ஒருசொல், புதுமையின் மை இறுதி நிலை கெடப், புது என நின்று, அதுவும் தன்னொற்றிரட்டல் என்ற சட்டத்தால் புத்து என ஆகி அகம் சேர - உயிர்வரின் 'உ'க்குறள் மெய்விட்டோடும் என்பதால் புத்தகம் ஆயிற்று.

புத்தகம் - புதுமைக்கு இடமானது. புதுமையான உள்ளிடம்.

அந்நாளில் ஒலி வடிவை வடிவிற் கொணர்ந்தார் எனில் அது புதுமை அன்றோ.

எனவே புத்தகம் தூய தமிழ்க் காரணப் பெயர்.

புத்தகத்தை புஸ்தகம் என்றது வடவர் செயல். வேட்டியை வேஷ்டி என்றும், முட்டியை முஷ்டி என்றும் அவர்கள் கூறவில்லையா?

**- குயில், 8.12.1959**

## 69

### மேகம்

இது வடசொல் அன்று. தூய தமிழ்க் காரணப் பெயர். மேகு - மேல் அம் சாரியை. "மேக்கு, மேற்றிசை, மேலும் பேர்" என்ற நிகண்டு காண்க. மேலே தவழும் முகிலுக்கு ஆகுபெயர். மேல் என்பதே மேற்கு, மேக்கு, மேகு எனத்திரியும்.

இதை வடவர் வடசொல் என்று கூறி மகிழ்வர். அது கடைபட்ட முடிச்சுமாறித்தனம், என்க.

### திசை, திக்கு

இவை திகழ்ச்சி என்பதன் அடியாகப் பிறந்த திகை என்பதன் திரிபுகள் திகை - திசை.

திசை, திக்கு ஆகிய இரண்டும் வடசொற்கள் என்பர் திசை தெரியாது திக்கற்றுத் திகைத்த ஆரியர்.

### சொத்து

இது வடமொழியா என்று ஒரு தோழர் கேட்கின்றார். கேட்க வேண்டிய கேள்வி! ஏனெனில் சிறந்த பொருள் மறைந்துள்ள ஒரு சொல்.

இது தூய தமிழ்க் காரணப் பெயர். என்னை? சொல் + து = சொற்று; து ஒன்றன்பாற் குறிப்பு வினைமுற்று இறுதிநிலை. சொல் - புகழ். புகழுடையது என்ற காரணத்தால் சொற்று என்றனர் முன்னைத் தமிழர்கள். சொற்று என்பது சொத்து என மருவியது.

ஒருவனுக்குள்ள செல்வமுழுவதையும் சொத்து என்பார்கள். எனவே அது புகழுக்குரியது. ஆதலால் சொத்து எனப்பட்டது ஆகு பெயர்.

- **குயில், 15.12.1959**

## 70

### வேகம்

இது வடசொல் அன்று.

வேகுதல், வேவுதல், வேதல், வேக்காடு முதலியவை போலவே வேகம் என்பது தொழிற்பெயரே.

வே. முதனிலை, கு. சாரியை. அம் தொழிற்பெயர் இறுதிநிலை. தீயிற்படுதல் என்பது பொருள்.

தீப்பட்டான் மீள விரைதல் இயல்பு. அது பற்றி வேகம் விரைவையும் குறிப்பதாயிற்று.

மனம் வேதலைக் குறிக்கையில் துன்பத்தையும் குறிக்கும்.

எனவே வேகம் தமிழ்க் காரணப் பெயரே என்க.

### வேதனை

இதை வடசொல் என எண்ணுவோரும் உளர். இதுவும் தமிழ்க் காரணப் பெயரே.

வே. முதனிலை! த் எழுத்துப் பேறு! அன் சாரியை!

ஐ தொழிற் பெயர் இறுதிநிலை, மனவேக்காடு பற்றிவரும், துன்பம் என்பது பொருள்.

பொருத்தனை, கொடுப்பனை என்பவற்றை ஒப்பு நோக்குக!

### சொந்தம்

இது வடசொல் அன்று. தொன்மை, தொன்று, தொண்டு, தொந்து, தொந்தம், அனைத்தும் ஒரு பொருள் உடைய சொற்கள். தொன்மையினின்றே மற்றவை தோன்றின. தொந்தம் என்பது சொந்தம் என்று மருவிற்று. தகரம், சகரமாதல் தமிழியற்கையேயாகும்.

பழமை என்பதற்குச் சொந்தம் என்ற பொருள் உண்டா எனின் ஆம், ஒருவனிடத்தில் ஒரு பொருள் பழமை தொட்டு இருந்தது எனின் அது அவனுக்கு உரியது ஆயிற்றன்றோ!

ஆதலின் சொந்தம் தமிழ்ச் சொல்லே என உணர்க!

- குயில், 22.12.1958